# பெற்றோர்களுக்கும் பராமரிப்பாளர்களுக்குமான செய்தி

‘மெல்பர்ன்’ பெருநகர்ப்பகுதி மற்றும் ‘மிட்ஷெல் ஷியர்’ பகுதிகளில் உள்ள பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான செய்தி

அன்புடைய பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு.

விக்டோரிய மாநிலத்திலுள்ள பாடசாலைகளுக்காகப் ‘பருவம் 3’-இல் செய்யப்படும் ஏற்பாடுகள் சம்பந்தமாக விக்டோரிய மாநிலம் முக்கியமான சில அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

‘விக்டோரிய மாநில தலைமைச் சுகாதார அதிகாரி’ (Victorian Chief Health Officer) அவர்களுடைய அறிவுரையின் அடிப்படையில், கீழே சொல்லப்பட்டுள்ளவாறு, ‘பருவம் 3’இன் 1-ஆம் வாரத்தில் ‘மெல்பர்ன்’ பெருநகர்ப்பகுதி மற்றும் ‘மிட்ஷெல் ஷியர்’ பகுதிகளில் உள்ள விக்டோரிய மாநில அரச பாடசாலைகளில் குறிப்பிட்ட சில ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும். இதற்குப் பிறகு, 2-ஆம் வாரத் துவக்கத்தில் இருந்து ‘பாலர் வகுப்பு’ (Prep) முதல் ‘ஆண்டு 10’ வரைக்கும் படிக்கும் மாணவ-மாணவியர்களுக்குப் பாடசாலைகள் ‘தொலை-தூர மற்றும் வசதிக்கேற்றக் கல்வி’ (remote and flexible learning) முறைக்கு மாறும்.

‘விக்டோரிய மாநில தலைமைச் சுகாதார அதிகாரி’ அவர்களுடைய அறிவுரையின் பிரகாரம் பாடசாலைகள் தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கலாம் என்பதைக் கவனிக்கவேண்டியது மிக முக்கியமாகும். பணியாளர்களாலும், மாணவ-மாணவியர்களாலும் மெற்கொள்ளப்படவேண்டிய சுகாதார நடவடிக்கைகளைப் பற்றியும் ‘விக்டோரிய மாநில தலைமைச் சுகாதார அதிகாரி’ அவர்கள் அறிவுரைகள் அளித்துள்ளார், மற்றும் அவற்றை நாங்கள் பின்பற்றுவோம்.

‘கோரோனா வைரஸ் ((COVID-19).)’ நோய்த்தொற்றுப் பரவலைக் குறைப்பதற்காக ‘மெல்பர்ன்’ பெருநகர்ப்பகுதி மற்றும் ‘மிட்ஷெல் ஷியர்’ பகுதிகளின் ஊடாகப் பயணிக்கும் மாணவ-மாணவியர் மற்றும் அவர்களது பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களது எண்ணிக்கையைக் குறைப்பதே இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளின் நோக்கமாகும்.

இருப்பினும், 'நேருக்கு-நேர்' (face-to-face) அளிக்கப்படும் கற்பிப்பும் சில மாணவ-மாணவியருக்காகத் தொடர்ந்து பராமரிக்கப்படவேண்டும் என்பதும்

முக்கியமாகும். 'ஆண்டு 11' மற்றும் 'ஆண்டு 12'-இல் படிக்கும் மாணவ-மாணவியர்கள் (மற்றும் VCE அல்லது VCAL பாடங்களைத் தமது பாடங்களோடு சேர்த்துப் படித்துவரும் 'ஆண்டு 10'-இல் உள்ள மாணவ-மாணவியர்களும்) அவர்களுடைய 'சீனியர் செகண்டரி சான்றிதழ்' படிப்பை, அது VCE அல்லது VCAL எதுவாக இருந்தாலும், தொடர அல்லது பூர்த்தி செய்ய ஏது செய்வது முக்கியம் என்பதனால், இந்த மாணவ-மாணவியர்களை இது உள்ளடக்கும்.

சிறப்புப் பாடசாலக(specialist schools)ளில் 'நேருக்கு-நேர்' சூழல்களில், பயிலும் மாணவ-மாணவியர்களுக்கு அவர்களது ஆசிரியர்கள் மற்றும் ஆதரவுதவிப் பணியாளர்களின் திறன்களை அந்தப் பாடசாலைகளில் முற்றிலுமாகப் பெறும் வசதி இருக்கவேண்டும் என்பது முக்கியம். வீட்டிலிருந்து வேலை செய்ய இயலாத பெற்றோர்களும், பராமரிப்பாளர்களும் உள்ள குடும்பங்களுக்கும், பாடசாலைத் தலக் கல்வியில் கிடைக்கும் ஆதரவுதவிகள் தேவைப்படும் குடும்பங்களுக்கும் நாம் ஆதரவுதவி அளிக்கவேண்டும்.

மேலதிக உறுதிமொழியினை அளிக்கும் விதத்தில், எமது பாடசாலையானது, 'மெல்பர்ன்' பெருநகர்ப்பகுதி மற்றும் 'மிட்ஷெல் ஷியர்' பகுதிகளில் உள்ள அரச பாடசாலைகளில் செய்யப்படுவதைப் போல, நாளின் துவக்கத்தில் அனைத்து மாணவ-மாணவியரது உடல் வெப்ப-நிலைப் பரிசோதனைகளை மேற்கொள்ளும். உங்கள் பிள்ளைக்கு அதிகரித்த உடல் வெப்ப-நிலை இருந்தால் அவரைப் பாடசாலையிலிருந்து அழைத்துச் செல்லுமாறு உங்களுக்குத் தெரிவிக்கப்படும்.

இந்தப் புதிய ஏற்பாடுகள் என்ன என்பது கீழே விபரமாகக் கோடிட்டுக் காண்பிக்கப்பட்டுள்ளது.

**ஜூலை 13 திங்கள் முதல் 17 வெள்ளி வரை**

'ஆண்டு 11' மற்றும் 'ஆண்டு 12'-இல் படிக்கும் மாணவ-மாணவியர்கள் மற்றும் VCE அல்லது VCAL பாடங்களைத் தமது பாடங்களோடு சேர்த்துப் படித்துவரும் 'ஆண்டு 10'-இல் உள்ள மாணவ-மாணவியர்கள் மற்றும்

சிறப்புப் பாடசாலைகளில் படிக்கும் மாணவ-மாணவியர்கள் ஜூலை 13, திங்கள் அன்று பாடசாலைக்குத் திரும்புவார்கள்.

ஜூலை 13 திங்கள் முதல் 17 வெள்ளி வரை 'பாலர் வகுப்' (Prep)பில் இருந்து 'ஆண்டு 10' வரைக்கும் உள்ள மாணவ-மாணவியர்கள் பாடசாலைக்கு வராத நாட்களாக இருக்கும். ஜூலை 20 திங்கள் முதல் 'தொலை-தூர மற்றும் வசதிக்கேற்ற' (remote and flexible learning)க் கல்வி முறைக்கு மாறுவதற்கான ஆயத்தங்களைச் செய்ய எமது பணியாளர்களுக்கு இந்த நாட்கள் ஏது செய்யும்.

தேவைப்படும் மாணவ-மாணவியருக்கு இந்த வாரத்தில் 'தல மேற்பார்வைப் பயிற்சித் திட்டம்' (on-site supervision program) ஒன்றை நாங்கள் அளிப்போம். வீட்டிலிருந்து வேலை செய்ய இயலாத மற்றும் மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட இயலாத நிலையிலுள்ள பெற்றோர்கள்/பராமரிப்பாளர்களது பிள்ளைகளுக்கும், பாதிப்புறும் நிலையிலுள்ள மாணவ-மாணவியருக்கும் இந்தத் திட்ட வசதி கிடைக்கும்.

திட்டமிடலில் எமக்கு உதவுவதற்காக, உங்களுக்கு இந்தத் திட்டம் தேவைப்பட்டால், தயவு செய்து பாடசாலையுடன் தொடர்புகொள்ளுங்கள்.

'மெல்பர்ன்' பெருநகர்ப்பகுதி மற்றும் 'மிட்ஷெல் ஷியர்' பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் இதே ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும்.

**ஜூலை 20 திங்கள்-இல் இருந்து**

ஜூலை 20 திங்கள் முதல் எமது பாடசாலையானது 'தொலை-தூர மற்றும் வசதிக்கேற்ற'க் கல்வி முறைக்கு மாறும். பின் வரும் மாணவ-மாணவியர்கள் நீங்கலாக, இது அனைத்து மாணவ-மாணவியருக்கும் பொருந்தும்:

- 'ஆண்டு 11' மற்றும் 'ஆண்டு 12'-இல் படிக்கும் மாணவ-மாணவியர்கள் மற்றும் VCL மற்றும் VCAL பாடங்களை 'ஆண்டு 10'-இல் படிக்கும் மாணவ-மாணவியர்கள்
- சிறப்புப் பாடசாலைகளில் சேர்ந்துள்ள மாணவ-மாணவியர்கள்

பின் வரும் மாணவ-மாணவியர்களால் 'தல மேற்பார்வைப் பயிற்சி'க்கு வர இயலும், ஆனால் இவர்கள் 'தொலை-தூர வசதிக்கேற்ற'க் கல்வி முறையையும் மேற்கொள்ளவேண்டும்:

- வேலைக்காகப் பாடசாலைத் தலத்திற்குத் திரும்புமாறு வேண்டப்படும் அரச பாடசாலை ஆசிரியர்களுடைய பிள்ளைகள் உள்ளடங்க, வீட்டில் பிள்ளைகளை மேற்பார்வை செய்வதற்காகத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய இயலாத பெற்றோர்கள்/பராமரிப்பாளர்களுடைய பிள்ளைகள்
- பாதிப்புறும் நிலையிலுள்ள மாணவ-மாணவியர்கள்
- தலக்-கல்விக்கு வரும் தெரிவை மேற்கொள்ளும் இயலாமையுடைய மாணவ-மாணவியர்கள்.

'பருவம் 2'-இல் 'தொலை-தூர வசதிக்கேற்ற'க் கல்வி முறையில் நாங்கள் அமர்த்துபவர்களுக்கும் இதைப் போன்ற ஏற்பாடுகளையே நாங்கள் பின்பற்றுவோம்.

உங்களுடைய பிள்ளைகளின் கல்வியில் நீங்கள் தொடர்ந்து அவர்களுக்கு ஆதரவுதவியாக இருப்பதற்கான பல தெரிவுகள் 'திணைக்கள'த்திடம் உள்ளன, இவற்றை நீங்கள் education.vic.gov.au/homelearning எனும் 'இல்லக் கல்வி' (*Learning from Home*) வலைத்தலத்தில் காணலாம்.

'கொரோனா வைரஸ் (COVID-19)' மற்றும் பாடசாலைகளைப் பற்றிய மிகச் சமீபத்தியத் தகவல்களை education.vic.gov.au/coronavirus எனும் 'கல்வி மற்றும் பயிற்சித் திணைகள'(Department of Education and Training)த்தின் வலைத்தலத்தில் காணலாம்.

வயது வந்தவர்களோ, குழந்தைகளோ இச் சமயத்தில் முகக் கவசங்களையோ, முக-மூடல்களையோ பாடசாலையில் பயன்படுத்த வேண்டுமெனப் பரிந்துரைக்கப்படவில்லை என்பதை விக்டோரிய மாநிலத் 'தலைமை சுகாதார அதிகாரி' அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளார். முன்பு எப்போதும் இருந்துள்ளதைப் போல, முகக் கவசங்களை அணிய விரும்பும் மாணவ-மாணவியர்கள் பாடசாலையிலும், பாடசாலைக்கு வந்து செல்லும் நேரங்களிலும் அவ்வாறு செய்யலாம்.

மேலும், இறுதியாக ஒரு நினைவூட்டல் - உங்களுக்கு, உங்கள் பிள்ளைக்கு அல்லது உங்களுடையக் குடும்ப அங்கத்தவர் ஒருவருக்கு சுரம், குளிர்ச்சுரங்கள் அல்லது வியர்த்தல்கள், இருமல், தொண்டை வலி, மூச்சு வாங்கல், நாசிக் கசிவு, நுகர் திறன் அல்லது சுவைத் திறன் இழப்பு ஆகிய அறிகுறிகள் ஏற்பட்டால், 'கொரோனா வைரஸ் (COVID-19)' நோயறிவுச்

THE EDUCATION STATE

SCHOOLS

சோதனை மையம் ஒன்றில் நீங்கள் நோயறிவுச் சோதனையை மேற்கொண்டு அதன் பிறகு வீட்டில் இருக்கவேண்டும்.

நமது பாடசாலைச் சமூகத்தினரைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்வதற்கு இது அதி முக்கியமாகும்.

'சுகாதாரம் மற்றும் மனித சேவைகள் திணைக்கள'(Department of Health and Human Services)த்திடமிருந்து சுகாதாரத்தைப் பற்றிய தகவல்கள் உங்களுக்குத் தேவைப்பட்டால் dhhs.vic.gov.au/coronavirus எனும் வலைத்தலத்திற்கு நீங்கள் செல்லலாம்.

VICTORIA State Government | Education and Training